மடல் XVII
மார்ச் 2018

# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் - செய்திமலர்


உழைப்பே உத்தம தொழுகை



“தேடுகல்வியில்லாத ஊரைத் தீயிட்டுக் கொளுத்துக” என்றான் பாரதி. வேலைவாய்ப்புக் கல்வி, மதிப்புறு கல்வி, வாழ்க்கைக் கல்வி என்று பல்வேறு தளங்களில் மாணவர்களை நெறிப்படுத்த பயிற்சிகள் நிகழ்ச்சிகளாய் விரிந்துள்ளன. வேலைவாய்ப்புப் பயிற்சி வகுப்பு, பெற்றோர் ஆசிரியர் சிறப்புக் கூட்டம், அறிவை விரிவுசெய்யும் WISDOM குழு, சாதனையாளர் நாள் கொண்டாட்டம், பயிற்சி & வழிகாட்டி மையம், உணர்வுகளை ஒழுங்குபடுத்தும் உணவுத் திருவிழா, உடல் ஆரோக்கியத்தைக் கவனப்படுத்தும் மருத்துவ விழிப்புணர்வுக் கூட்டம் ஆகிய அனைத்தையும் பந்தி விரிக்கிறது நமது வளாகச் செய்திமலரின் சிறப்பு வாசம்.

'வாசம் வீசும் மலரின் மகரந்தத் துளிகள் தொடர்கின்றன...’

- வாழ்த்துகளுடன்,
ஆசிரியர் குழு.

## TRAINING PROGRAMME





The Placement and Career guidance Cell Organized a training Programme for outgoing students relating to personality skills, resume preparation and interview skills conducted by Globel Talent Track, Chennai for three days from 19.02.2018 to 21.02.2018. Samarth Learning Solutions short listed our college students for internship training and Placement on 20.02.2018.

## பெற்றோர் - ஆசிரியர் சிறப்புக் கூட்டம்







நமது கல்லூரியில் 31.01.2018 அன்று அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகளில் பயில்கின்ற மாணவர்களுக்கும் 01.02.2018 அன்று சுயநிதிப்பிரிவில் பயில்கின்ற மாணவர்களுக்கும் “பெற்றோர் - ஆசிரியர் சிறப்புக் கூட்டம்” நடைபெற்றது. முதல்நாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் E.R. இரவிச்சந்திரன் அவர்களும் மறுநாள் கணிதத்துறைப் பேராசிரியர் கிருஷ்ணகுமார் அவர்களும் வரவேற்புரை வழங்கினர். கல்லூரிச் செயலர் திரு. கல்கி இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கு ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை வழங்கும் பொருட்டுத் தேவையான அனைத்து வசதிகளையும் நிர்வாகம் செய்து தருவதாகக் குறிப்பிட்டார். மேலும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் வெற்றிக்காகவும் தொடர்ந்து உழைத்துவரும் WPD, CTCP, WISDOM CLUB, நூலக அமைப்பு, NSS, NCC, SPORTS, BOOK REVIEW FORUM, பாரதி மற்றும் பாரதிதாசன் வாசகர் வட்டம் உள்ளிட்ட பல அமைப்புகளின் செயல்பாடுகளைப் பற்றி அந்தந்த அமைப்பின் பொறுப்பாளராக இருக்கும் பேராசிரியர்கள் சிற்றுரை வழங்கினர். முன்னதாக, கல்லூரியைப் பற்றிய பொதுவான பல செய்திகளைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. வீரமணி அவர்களும் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் S. கந்தசாமி அவர்களும் ஒலி - ஒளி வடிவத்தில் காட்சிப்படுத்தினர். தங்களுக்குச் சிறந்த ஒத்துழைப்பு வழங்குமாறு செயலர் அவர்கள் பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வுகளில் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தே. இந்திரகுமாரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**ஆசிரியர் குழு**

முனைவர் N. கண்ணன்
முனைவர் D. இந்திரகுமாரி
முனைவர் P. செந்தில்
முனைவர் B. பிரதீபா
திரு. R. சுவாமிநாதன்
திரு. S. கார்த்திக் சரவணன்
திரு. R. ஆசைத்தம்பி
முனைவர் G. வடிவேல்முருகன்

You could follow us on
udcnewsletters@gmail.com

## District Level Inter School Competition



The PG & Research Department of Economics has organized One Day **District Level Inter School Competition** in Economics on **2nd February 2018**. As many as **16 Schools** were participated and won cash awards and Over all School Championship. **Mrs. Padma Ramakrishnan,** President of UDC Council offered felicitation. **Dr. R. Asokan,** Faculty in Economics, Government Arts College (Autonomous), Salem delivered Inaugural address on 'Human Development'. **Dr. S. Iyyampillai,** Former Chair, School of Economics, Commerce and Financial Studies, Bharathidasan University, Tiruchirappalli delivered Valedictory Address on **'Prospects of Economics Courses'**.

## WISDOM CLUB





The Inaugural function of the Wisdom Club was held on 19.02.2018 (Monday) in our college. Dr.N.Venugopal, Ophthalmologist from AG Eye hospital, Trichy inaugurated the club. Dr.D.Christy Selvarani, Principal presided over the function. Dr.M.Prakash, Asst. Prof of physics, coordinator of the club welcomed the gathering. Dr.S.Gnanaprakesh Asst. Prof, Department of Economics and Mr.M.Sathiskumar Asst. Prof, Department of BBA , members of the clubgave felicitations. Dr.R.Kannan Asst prof, Department of Tamil proposed the vote of thanks

.

As part of the Inaugural function, an eye screening camp was conducted from 19.02.2018 to 20.02.2018 (2 days) for students and staff. Doctors' team from AG Eye hospital participated. Around 2500 students and staff got benefitted.

## ACHIEVER’S DAY



நமது கல்லூரியில் 2018 - ஆம் ஆண்டு பல்கலைக்கழக, மாநில மற்றும் தேசிய அளவில் கல்வி, விளையாட்டு, என்.சி.சி. உள்ளிட்ட பல பிரிவுகளில் சாதனை படைத்த மாணவ மாணவிகளைப் பாராட்டும் வகையில் ‘சாதனையாளர் தினம் - 2018’ நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாநகரக் காவல்துறை அதிகாரி அமல்ராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்குக் கேடயங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

## CTCP



**On 08.02.2018, Centre for Training and Career Planning (CTCP), of our college organized training cum guidance programme for the TNPSC Group-IV aspirants of our college. Mr.Pradeep from RACE IAS Academy gave tips to pass the competitive examinations using proper examination strategy and Time Management. Mr.Manoharan, Senior Auditor, cooperative Department, an alumnus of our college, motivated the students that everyone can pass the TNPSC Examination if they prepare well with correct exam strategy. Around 230 students who have applied for TNPSC Group IV Examination participated. The students gave the feedback that the programme was very useful. Mr.A.Mohan Coordinator of CTCP welcomed the gathering and Dr.S.Gnanaprakesh Assistant professor of Economics proposed the Vote of Thanks. Dr.G.Pradeepa, Dr.M.Prakash and Dr.Ashik Hameed members of CTCP made the arrangements.**

## உணவுத் திருவிழா 2018









நமது கல்லூரியில் உணவுத் திருவிழா 24.02.2018 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதில் மலர்களைக் கொண்டு பூங்கொத்து தயாரித்தல், மலர்க்குடுவை அலங்கரித்தல், மாலை தொடுத்தல், காய்கறிகளில் பல உருவங்களைச் செதுக்கி அலங்கரித்தல் போன்றவற்றோடு பல்வேறு வகையான உணவு சமைக்கும் போட்டியும் கண்காட்சியும் நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குக் கல்லூரி நிர்வாகக்குழுத் தலைவர் பத்மா இராமகிருஷ்ணன் பரிசுகள் வழங்கினார். கல்லூரி செயலர் திரு. கல்கி இராமகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி




நம் கல்லூரி சமூகப் பணித்துறையின் முதலாமாண்டு மாணவன் S. ரோகித்குமார் தம் துறையோடு YRC & RRC ஆகியவற்றையும் இணைத்து ஒரு சமுதாய விழிப்புணர்வு நிகழ்ச்சியை 24.02.2018 அன்று காலை 10.30 மணிக்கு MSR கட்டிடத்திலுள்ள குளிர்மை அரங்கில் நடத்தினார். இதில் மாணவர்களுக்கு HIV, AIDS பற்றிய விழிப்புணர்வு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், அவர்களின் கேள்விகளுக்குத் தகுந்த பதில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முனைவர் R. கிருஷ்ணகுமார், முனைவர் M. சுரேஷ்குமார், திரு. P. முத்து மாணிக்கம், T. இளவரசன், திருமதி K. ரேணுகாதேவி, M.C. மாலதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.